பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
22 10 2024 6 45
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தேசிய தண்ணீர் விருதுகளை, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.
- பசுமை ஹைட்ரஜனை ஊக்குவிக்க மத்திய அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- கிராமப் புற மாணவர்கள் உயர்கல்வியில் உலக அளவில் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கில், நான் முதல்வன் திட்டம் செயல்படுத்தப்படுவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- தமிழகத்தில் 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- வளரும் அணிகளுக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்திய ஏ அணி, ஏழு விக்கெட் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள்---*</u>

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஐந்தாவது தேசிய தண்ணீர் விருதுகளைப் புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

சிறந்த மாநிலம், சிறந்த மாவட்டம், சிறந்த கிராம ஊராட்சி, சிறந்த நிறுவனங்கள் உள்ளிட்ட ஒன்பது பிரிவுகளில் 38 பேரை, இந்த் விருதுக்கு மத்திய ஜல் சக்தி அமைச்சகம் தேர்வு செய்துள்ளது.

சிறந்த மாநிலம் என்ற பிரிவில், முதல் இடத்துக்கான விருது ஒடிசாவுக்கும், இரண்டாவது இடத்துக்கான விருது உத்தரப்பிரதேசத்துக்கும், மூன்றாவது இடத்துக்கான விருது குஜராத் மற்றும் புதுச்சேரிக்கும் வழங்கப்படுகிறது.

சிறந்த நிறுவனங்கள் பிரிவில் கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழம் முதலிடத்துக்கான விருதையும், சென்னை ஐஐடி மூன்றாவது இடத்துக்கான விருதையும் பெறுகின்றன.

<<<<>>>>

பசுமை ஹைட்ரஜனை ஊக்குவிக்க மத்திய அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்தியா வந்துள்ள பூடான் பிரதமர் திரு. **Tshering Tobgay** புதுதில்லியில் பசுமை ஹைட்ரஜன் எரிபொருள் பேருந்தில் நேற்று பயணம் மேற்கொண்டார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் கருத்து தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, எரிசக்தி நிலைத்தன்மையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளில் பசுமை ஹைட்ரஜன் பேருந்து முக்கியமானது என கூறியுள்ளார்.

இதுபோன்ற முயற்சிகள் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க பெரிதும் பங்களிக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக பூடான் பிரதமர், புதுதில்லியில் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார்.

இந்தியாவுக்கு பூடான் சிறந்த நட்பு நாடு எனவும், பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்றும் திரு. நரேந்திர மோடி இந்த சந்திப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கிராமப்புற மாணவர்கள் உயர்கல்வியில் உலக அளவில் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கில், நான் முதல்வன் திட்டம் செயல்படுத்தப்படுவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் தொழில்சார் பயிற்சியை முடித்து திரும்பிய பேராசிரியர்களுடன் துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் நேற்று கலந்துரையாடினார்.

இது தொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் நான் முதல்வன் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் தொழில்சார் பயிற்சி தமிழ்நாட்டில் திறன்மேம்பாட்டை அதிகரிப்பதற்கான முக்கிய நடவடிக்கை என குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய திறன் படிப்புகள் மற்றும் தொழில்துறை தேவையைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு இப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

கிராமப்புற மாணவர்கள் உலகின் முன்னணி நிறுவனங்களில் பணிபுரியும் வாய்ப்பை பெற வேண்டும் என்ற நோக்கில் நான் முதல்வன் திட்டம் செயல்படுத்தப்படுவதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

அகழாய்வுகள் மூலம், வரலாற்றை மக்களுக்குக் கொண்டு செல்லும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக மாநில தொல்லியல் துறை அமைச்சர் திரு தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

மதுரையில் நடைபெற்ற நூல் வெளியிட்டு விழா ஒன்றில் பேசிய அவர், அகழாய்வுகள் மூலம் உண்மை வரலாறுகளை நிரூபிக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்தார்.

இந்திய அளவில் ஆதிச்சநல்லூர் அகழாய்வுதான் முதன் முதலில் தொடங்கப்பட்ட ஆய்வு என்றும் அவர் குறிப்பிட்டார்.

சங்க இலக்கியங்களில் வரும் நிகழ்வுகளுக்கும், அகழாய்வுகளுக்கும் தொடர்புகள் உள்ளன என்றும் திரு தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

<<<<>>>>

சென்னையில் உள்ள அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூடுதலாக 56 கோடி ரூபாய் மதிப்பில் 4 தளங்கள் கட்டப்படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இந்த மருத்துவமனைக்கு 7 கோடி ரூபாய் மதிப்பில் நவீன உபகரணங்கள் வாங்குவதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, இந்தியாவின் 3-வது பழமையான பல் மருத்துவக் கல்லூரி என்றும், இது பல் மருத்துவத் துறையில் முக்கிய மையமாக உள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு மேற்கொள்ளப்படும் மேம்பாட்டு நடவடிக்கைகள், பல் கட்டும் துறை, வாய்வழி நோயியல், பொது சுகாதார பல் மருத்துவம், பல் ஈறு அறுவை சிகிச்சை துறை போன்ற துறைகளை வலுப்படுத்தும் என அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

தில்லியில் வரும் பிப்ரவரி மாதம் நடைபெற உள்ள பாரத் டெக்ஸ் கண்காட்சி, ஜவுளித் துறையினருக்கு நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்தி தரும் என்று கரூர் ஜவுளி உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் திரு. கோபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்த கண்காட்சி தொடர்பான அறிமுக நிகழ்ச்சி கரூரில் நடைபெற்றது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாரத் டெக்ஸ் கண்காட்சியில் பங்கேற்க ஜவுளித்துறையினரை மத்திய அரசு ஊக்குவித்து வருவதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தேனி, திண்டுக்கல், கோவை, மதுரை, திருச்சி, நீலகிரி, திருப்பூர், ஈரோடு, கரூர் ஆகிய மாவட்டங்களின் சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த அமையம் கூறியுள்ளது.

தமிழகத்தின் பிற பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், ஒருசில இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

வியட்நாமின் புதிய அதிபராக, திரு லூங் காங்கை அந்நாட்டு நாடாளுமன்றம் தேர்வு செய்துள்ளது.

<<<<>>>>

ஜெர்மனி பிரதமர் திரு ஓலாஃப் ஸ்கால்ஸ், மூன்று நாள் அரசு முறைப் பயணமாக நாளை மறுநாள் இந்தியா வருகிறார்.

<<<<>>>>

சிங்கப்பூர் சென்றுள்ள மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், அந்நாட்டின் பிரதமர், துணைப் பிரதமர், கல்வி அமைச்சர், வெளியுறவு அமைச்சர் ஆகியோரை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

<<<<>>>>

ஆஸ்திரேலியா, ஜெர்மனி நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கரை, புதுதில்லியில் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

<<<<>>>>

வணிக ரீதியிலான நிலக்கரி சுரங்கங்களுக்கான பத்தாவது சுற்று ஏலத்தை மத்திய நிலக்கரி அமைச்சகம் நேற்று தொடங்கியது.

<<<<>>>>

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் 15-வது பட்டமளிப்பு விழாவில், தமிழக ஆளுநர் திரு ஆர்.என். ரவி பங்கேற்று, 6 ஆயிரத்து 940 மாணவ, மாணவிகளுக்குப் பட்டங்களை வழங்கினார்.

<<<<>>>>

தமிழதகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் தொல்குடி, நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டம், சிஎம் அரைஸ் ஆகிய திட்டங்களின் கீழ் பயன்பெற ஆதார் எண் கட்டாயம் என மாநில அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>

கிருஷ்ணகிரியில் கடந்த 40 நாட்களாக நடைபெற்று வந்த அகில இந்திய மாங்கனிக் கண்காட்சி நேற்று நிறைவடைந்தது.

<<<<>>>>

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற வளர்ச்சி மற்றும் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் மத்திய அரசுத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

<<<<>>>>

அயோடின் பற்றாக்குறை தடுப்பு தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டதையொட்டி, திருவள்ளூரில் தமிழ்நாடு உணவுப் பாதுகாப்புத் துறை சார்பில் செயல் விளக்கக் கண்காட்சி நடைபெற்றது.

<<<<>>>>

நாகை மாவட்டத்தில் உணவுத் துறை அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது, காரைக்காலுக்குக் கடத்தப்பட இருந்த 30 மூட்டை ரேஷன் அரிசி பறிமுதல் செய்யப்பட்டது.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில், லஞ்ச ஒழிப்புதுறையினர் நடத்திய சோதனையில், கணக்கில் வராத 53 ஆயிரம் ரூபாய் பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

<<<<>>>>

சென்னை அருகே வங்கக்கடல் பகுதியில் வலையில் சிக்கி உயிருக்கு போராடிய, அரிய வகை கடல் ஆமையை கடலோர காவல்படை வீரர்கள் பாதுகாப்பாக மீட்டனர்.

<<<<>>>>

தீபாவளிப் பண்டிகையை ஒட்டி சென்னையின் பல்வேறு இடங்களில் 18 ஆயிரம் காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மாநகர காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்தி*

வளர்ந்து வரும் அணிகளுக்கு இடையிலான ஆசிய கோப்பை ட்வெண்டி ட்வெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்திய ஏ அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு எமிரேட்சை வென்றது.

ஓமனில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த ஐக்கிய அரபு எமிரேட்ஸை 19 பந்துகள் எஞ்சியிருந்த நிலையில், 107 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

108 ரன் என்ற வெற்றி இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி, 10 புள்ளி 5 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 111 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

இந்திய ஏ அணி நாளை நடைபெறும் ஆட்டத்தில் ஓமனை எதிர்கொள்கிறது.

<<<<>>>>